முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1123

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.10.2022, புதன்கிழமை

1. கருணையே வடிவான சற்குருவே
கலிதனை காக்க வந்த ஞான குருவே
ஆறுமுகன் என் அவதாரமான சித்தகுருவே
அப்பனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே சுபகிருது துலை திங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 09 ம் நாள் 26.10.2022 புதன்கிழமை)
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
உயர்வான அரங்கன் தர்மவழிகளே
உலகை காத்து வழிநடத்தக் கூடும்
3. கூடாத மாச்சர்யங்கள் அனைத்தும்
குவலயத்தை விட்டு கூறிடுவேன் அரங்கன் அவதாரத்தால் அகன்றோடும்
ஈடேறும் ஞானமும் தர்மமும் நிறைந்த
இணையில்லா ஞானவான்கள் நிரம்பிய உலகாக மாறி
4. மாறியே உலகமெங்கும் தர்மங்களும்
மகத்துவமிக்க சன்மார்க்க நெறிகளும்
ஆறுதலாக மக்களுக்கு ஞானபலமாக
அழியாமை தரும்வண்ணம் பெருகி
5. பெருகியே உலகம் பாதுகாப்பைப் பெறும்
பேருலகம் துன்பங்கள் வன்கொடுமைகள் இல்லாத
ஆறுமுகனார் எனைவணங்கும் ஆற்றல்மிக்க அழியாமைபெற்ற
ஞானிகள் வழி காட்டுதல் மூலமாக
6. ஆகவே உலகம் அற்புதம் காணும்
அமைதி பாதுகாப்பு நிறைந்த வண்ணம்
வண்ணமுடன் உலகமெங்கும் அரங்கன் சேவை வளர்ந்து வளர்ந்து
வையகமே எண்ணமெல்லாம் ஆறுமுகன் என்நினைவுகூடிட இவ்வுலகே ஞானஉலகாக மாற்றம்கண்டு
7. கண்டுமே ஞானவான்கள் நிறைந்த
ஞானிகள் வழி காட்டுகின்ற ஆற்றல்மிக்க
ஞான ஆட்சிக் காலமாக மாறும்
நாட்டிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–